பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 08 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. தேசிய புவி அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்கினார்.

2. மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராஹிமை, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினார்.

3. இந்தியா – மலேசியா இடையிலான வர்த்தக உறவுகளை விரிவாக்கம் செய்வது முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. நாடு முழுவதும் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஆய்வு மேற்கொள்வதற்கு தேசிய அளவில் குழு அமைக்கப்போவதாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

5. பதினெட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான உலக **Handball** சாம்பியன் போட்டியின் குழு பிரிவில் கனடாவை வீழ்த்தி இந்தியா வெற்றிபெற்றது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<>>>>>>

தேசிய புவி அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இதற்கான விழாவில், வாழ்நாள் சாதனைக்கான தேசிய புவி அறிவியல் விருது, தேசிய இளம் புவி அறிவியலாளர் விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.

மத்திய அரசின் சுரங்கத்துறை அமைச்சகத்தால் புவி அறிவியல் துறையின் சார்பில் ஏற்படுத்தப்பட்ட மதிப்பு மிக்க இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை ஐ.ஐ.டி-யின் கட்டுமான பொறியியல் துறையின் பேராசிரியர் திருமலா குடிமெல்லா ரகுகாந்திற்கு, நிலநடுக்கம், நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற பேரிடர்கள் சார்ந்த ஆய்விற்காக தனிநபர் பிரிவில் அவருக்கு விருது வழங்கப்பட்டது.

<<<<>>>>>>

இந்தியாவுக்கு அரசு முறைப்பயணமாக வந்துள்ள மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராஹிமுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரை வரவேற்ற பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்களை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

இதைத்தொடர்ந்து, ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் திரு அன்வர் இப்ராஹிம் மரியாதை செலுத்தினார்.

பின்னர் மலேசிய பிரதமரை, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், திரு அன்வர் இப்ராஹிமின் வழிகாட்டுதலின்கீழ், இருநாடுகளுக்கு இடையிலான உறவு மேலும் வலுப்பெறும் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியுடன், மலேசிய பிரதமர் மேற்கொள்ளும் சந்திப்பை எதிர்நோக்கியிருப்பதாகவும் திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>>>

இந்தியா – மலேசியா இடையிலான வர்த்தக உறவுகளை விரிவாக்கம் செய்வது முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்தியா – மலேசியா வர்த்தக நிறுவன தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் விதமாக உருவாக்கப்பட்ட வாய்ப்புகள் இருநாடுகள் இடையேயான வர்த்தக உறவை ஊக்கப்படுத்துவதாக விளங்குகின்றன என்று தெரிவித்தார்.

கல்வி, சுகாதாரம், சுற்றுலா, உட்கட்டமைப்பு, டிஜிட்டல் பொருளாதாரம், எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் ஒத்துழைப்பை அதிகரித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

எண்ணெய் மற்றும் எரிவாயுத்துறையில் இந்தியா வளர்ச்சி கண்டுவருவதாகவும், அத்துறையில் மலேசிய நிறுவனங்கள் பங்கேற்பதை ஊக்குவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்துறைகளில் தொடர்ந்து இணைந்து செயலாற்றுவதன் மூலமாக இருநாடுகளுக்கு இடையேயான உறவு மேலும் வலுப்பெறும் என்று திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>>>

ஹங்கேரி நாட்டின் தேசிய தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, அந்நாட்டு மக்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவு 75 ஆண்டுகளை எட்டியுள்ளதாகவும், இருதரப்பு உறவு மேலும் வலுப்பெற வேண்டும் எனவும் அவர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர் ஒண்டிவீரனின் 253-ஆவது நினைவு தினம் இன்று அனுரிக்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் அன்னாரது சிலைக்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஒண்டிவீரன் நினைவை போற்றும் வகையில் அஞ்சல் தலை வெளியிட்டு மத்திய அரசு பெருமைப்படுத்தியதாக கூறினார்.

*<u>(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 33 செகண்ட்ஸ்)</u>*

மெட்ரோ ரயில் திட்டம் தொடர்பான பயன்பாட்டு அறிக்கை, தணிக்கை அறிக்கையை தமிழக அரசு வழங்கினால் அத்திட்டத்திற்கான நிதியை மத்திய அரசு உடனடியாக வழங்கும் என்று திரு எல். முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>>>

மருத்துவமனைகளில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய அரசு மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு சுகாதார அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது.

போதுமான அளவில் தரமான சிசிடிவி கேமராக்களை முக்கியமான இடங்களில் பொருத்த வேண்டும் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசரநிலையின் போது உடனடியாக செலாற்றும் வகையில் கட்டுப்பாட்டு அறை ஒன்றையும் அமைக்க வேண்டும் என்று அந்த அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் கண்காணிப்புப் பணியில் பயிற்சி பெற்ற பாதுகாவலர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும், மருத்துவமனை பணியாளர்களின் அடையாள அட்டையை சோதித்த பிறகே அவர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவமனைப் பணியாளர்களுக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், பெண் மருத்துவப்பணியாளர்களுக்கான அடிப்படை வசதிகள் மருத்துவமனை வளாகத்தில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் மத்திய சுகாதார அமைச்சகம், அக்கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>>>

நாடு முழுவதும் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஆய்வு மேற்கொள்வதற்கு தேசிய அளவில் குழு அமைக்கப்போவதாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

கொல்கத்தாவில் பெண் பயிற்சிமருத்துவர் தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் பாதிக்கப்பட்ட பெண்ணின் புகைப்படம் ஊடகங்களில் வெளியானது கவலைக்குரியதாகும் என்று கூறியுள்ளது.

பெண் மருத்துவர்களுக்கு பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்க வேண்டும் என்றும், ஆண், பெண் மருத்துவர்களுக்கு என்று தனித்தனி ஓய்வறைகள், பணி அறைகள் அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>>>

தமிழகத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி சேவையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 200 வாகனங்களின் சேவையை அவர் தொடங்கிவைத்தார்.

மாநிலம் முழுவதும் இந்த வாகனங்கள் கால்நடை பராமரிப்பு சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, கால்நடை துறை, மீன்வளத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டங்களை காணொலி வாயிலாக முதலமைச்சர் திறந்துவைத்தார்.

மேலும், தமிழக அரசின் சார்பில் பல்வேறு துறைகளில் தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் திரு மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

<<<<>>>>>>

இந்தியா - ஜப்பான் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் இடையிலான பேச்சுவார்த்தை புதுதில்லியில் இன்று மாலை நடைபெறுகிறது

இதில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. கிகாரா மினோரு, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி யோகோ காமிகாவா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கிடையே பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ஜப்பான் பாதுகாப்பு அமைச்சருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளார்.

இந்த இருதரப்பு பேச்சுவார்த்தையில் மண்டல மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>>>

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 80-வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ராஜீவ்காந்தியின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார்.

தில்லியில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில், மாநில காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

<<<<>>>>>>

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி வாய்க்கால் செல்லும் கசிவுநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டது தொடர்பாக, அப்பகுதியில் தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேவைப்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு கூடுதலாக தண்ணீர் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>>>

இந்தியாவின் வடமேற்கு, மேற்கு, கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தெற்குப் பகுதியில் நாளை வரை மழை பெய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு, ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பெரும்பாலான பகுதிகளில் வரும் வெள்ளிக்கிழமை வரை கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.

<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பதினெட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான உலக **Handball** சாம்பியன் போட்டியின் குழு பிரிவில் கனடாவை வீழ்த்தி இந்தியா வெற்றிபெற்றது.

சீனாவின் **Chuzhou** நகரில் நடைபெற்ற இப்போட்டியில் 24-21 என்ற புள்ளி கணக்கில் இந்திய அணி வெற்றிபெற்றது.

--------------

செயின்ட்லூயி-ல் நடைபெற்றுவரும் **Sinquefield** கோப்பை **Chess** போட்டியின் இந்தியாவின் **Gukesh,** சீனாவின் **Ding Liren** இடையேயான முதல் சுற்று ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

**<<<<<>>>>>>**